## 96. ஆராதிக்க கூடியுள்ளோம்

### பல்லவி

ஆராதிக்க கூடியுள்ளோம்
துதிப்பாட கூடியுள்ளோம்
நீர் செய்த நன்மைகளை சொல்லி சொல்லி
ஆர்பரிக்க கூடியுள்ளோம் - 2

### அனுபல்லவி

*துதிகனம் மகிமை எல்லாம் உமக்கே*
*ஸ்தோத்திரமும் புகழ்ச்சியுமெல்லாம் உமக்கே - 2*

### சரணங்கள்

1. ஆனந்த முழக்கமிட வந்திருக்கிறோம்
துதிபாடி பலிசெலுத்த வந்திருக்கிறோம்
இரட்சிப்பின் பாத்திரத்தை கையில் எடுத்து
இரட்சகரை தொழுதுகொள்ள வந்திருக்கிறோம்
- ஆராதிக்க

2. தீங்கு நாளில் உந்தன் கூடாரத்தில்
மறைத்து ஒளித்து வைத்தீர்
கன்மலைமேல் எந்தன் பாதங்களை
உயர்த்தி நிறுத்தி வைத்தீர்
- ஆராதிக்க

3. என் தலையை சுற்றியுள்ள பகைவருக்கு
மேலாக உயர்த்த வைத்தீர்
மகிமையின் தேவனை உயர்த்திடுவேன்
உமக்கு ஊழியம் செய்திடுவேன்
- ஆராதிக்க